1969 மார்ச் 7]

THIRU K. VINAYAKAM : Sir, how many acres of land will be cultivated from the water stored by this dam?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I do not have particulars about the extent of the acres to be cultivated.

கற்பகா நதித் திட்டம்.

*221 வினு—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பொதுப்பணித் துறைஅமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடை யளிப்பாரா—

நெல்லை மாவட்டத்தில் "கற்பகா நதித் திட்டம்" எப்போது துவக்கப் படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருநெல்வேலி மாவட்டத் தில் கற்பகா நதி என்ற பெயருள்ள ஆறு எதுவுமில்லை. மாண்புமிகு உறுப்பினர் கறுப்பாநதி திட்டத்தையே குறிப்பிடுகிருர் என்று கொள்ளப் படுகிறது.

கறுப்பா நதியின் குறுக்கே நீர்த்தேக்கம் ஒன்று கட்டும் செயற் குறிப்பு அரசாங்கத்தின் ஆய்வில் இருந்து வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, கறுப்பா நதித் திட்டத்தின் மொத்த மதிப்பு என்ன ? இது எப்பொழுது கட்டி முடிக்கப்படும் ? இந்தத் திட்டத்திஞல் எத்தனை எக்கரா பயன் படும் ? அது எந்த எந்த இடங்களுக்குப் பயன்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டத்தின் மதிப் பீட்டுச் செலவு ரூ. 140 லட்சம். தற்போதுள்ள பகுதியில் 796 எக்கருக்குப் பாசன வசதி நிலைப்படும். பாசன வசதி ஏற்கனவே அளிக்கப்படாத பகுதியில், சேர்க்கப்படக்கூடிய ஆயக்கட்டு 1 647 எக்கர். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ள எண்ணியுள்ள திட்டங் களில் இதுவும் ஒன்ருகும். இத்திட்டம்பற்றிய செயற்குறிப்புகள் மத்திய நீர் மின்சாரக் கழகத்திற்கும் திட்டக் குழுவிற்கும் ஒப்புதல் அளிக்க அனுப்பப்பட்டுள்ளது.

ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் வேறு எந்த அணைக்கட்டுகள் எடுத்துக்கொள்ளப்படுவதாக அரசு நிச்சயித் திருக்கிறது என்பதைத் தெரிவிக்கலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது ஒரு மிக விரிந்த கேள்வி. தனியாகக் கேள்வி போட்டால் பதிலளிக்கலாம்.

துடியலூர்-சர்க்கார் சாமக்குளம் சாலை.

*222 வினு. திரு. பி. வேலுசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி துடியலூரிலிருந்து சர்க்கார் சாமக் குளம் வருகிற வழியில் இதுவரை, வையம்பாளையம் கோட்டை ஆகிய இந்த மூன்று ஊர்களுக்குப் போகும் வழியில் உள்ள பள்ளங்களில் குறுக்கே பாலங்கள் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் என்ருல் எப்போது வேலை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இதுகுறித்துச் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.